**சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலன்புரி நிதியம் -2013**

-----------------------------------------------------------------------------------------------------------

சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 1973 இன் 18 ஆம் இலக்க சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலன்புரி நிதிய அதிகாரச்சட்டத்தின் 7(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்றவகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப் படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

போகம்பறை சிறைச்சாலையால் சிறைக்ககைதிகளின் உழைப்பை வழங்கியமைக்காக ஏனைய திணைக்களங்களிலிருந்து நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,951,200 தொகையில் ரூபா 176,600 தொகை மீளாய்வாண்டில் சிறைச்சாலை கணக்கிற்கு கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அது நிதியக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

நிதியத்தின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் நன்கொடைப் பெறுவனவு பொழிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டில் நன்கொடைப் பெறுவனவுககள் தலுபொத்த சிறைச்சாலை ரூபா 245,050 தொகையும் திருகோணமலை சிறைச்சாலை ரூபா 124,449 தொகையுமாக இருந்த போதிலும், சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் விரிவான நன்கொடை சொத்துக்கள் பெறுவனவு பதிவேட்டின் பிரகாரம் அப்பெறுமதி முறையே ரூபா 13,800 மற்றும் ரூபா 134,529 ஆக இருந்தமையால் ரூபா 241,330 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) அம்பேபுஸ்ஸ சிறைச்சாலையின் தனிப்பட்ட கணக்கின் பிரகாரம் சிறைக்கைதிகளின் கல்வி மற்றும் சமயம் சார்ந்த செலவினம் ரூபா 10,000 மற்றும் ஏனைய வசதிகள் செலவினம் ரூபா 24,415 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அச்செலவினம் முறையே ரூபா 19,999 மற்றும் ரூபா 14,416 ஆக காட்டப்பட்டிருந்தது.

## 3 நிதி மீளாய்வு

### 3.1. நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,307,314 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டில் ரூபா 1,144,613 பற்றாக்குறையாக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறையில் ரூபா 162,701 ஆன அதிகரிப்பிற்காக வருமானம் ரூபா 201,547 ஆல் குறைவடைந்தமை மற்றும் நிதியத்தின் செலவினம் ரூபா 38,846 ஆல் குறைவடைந்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் வருமானம் ரூபா 3,947,010 ஆக இருந்த போதும் சிறைக்கைதிகளின் நலன்புரி செயற்பாடுகளுக்காக ரூபா 1,372,881 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி சிறைக்கைதிகளின் நலன்புரி செயற்பாடுகளுக்காக நிதியத்தின் பங்களிப்பு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் வருமானங்களை ஈட்டியிருந்த 07 சிறைச்சாலைகளுக்காக வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்களின் காரணமாக பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டிற்காக சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்தின் மதிப்பீடு மற்றும் உள்ளபடியான வருமானங்கள் செலவினங்களுக்கு இடையே 3 சதவீதத்திலிருந்து 145 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்தின் பெறுவனவுகள் ரூபா 3,893,005 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளவாறாக கிடைத்த தொகை ரூபா 1,806,918 ஆக இருந்தது. அதன் பிரகாரம்

மதிப்பிடப்பட்ட பெறுவனவுகள் மற்றும் உள்ளவாறான பெறுவனவுகளுக்கிடையே ரூபா 2,086,087 வேறுபாடாக இருந்தது. அதன் பிரகாரம் பெறுவனவுகள் 50 சதவீதத்திற்கு மேல் குறைவடந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்டிருந்த செலவினம் ரூபா 3,740,800 ஆக இருந்த போதிலும், சிறைக்கைதிகளின் நலன்புரி நடவடிக்கைகளுக்கான உள்ளவாறான செலவினம் ரூபா 1,372,881 ஆக இருந்தமையால் அது 63 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

சிறைக்கைதிகளின் நலன்புரிக்காக நிதியத்தின் செயற்பாடுகளுக்குரிய உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் போதியளவில் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டி ருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு